ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : தங்கபாண்டி (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : தங்கராஜ் |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 28/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2025

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் 1 முதல் 7 வரையிலான எதிரிகளை தெரியும். கடந்த 09.09.2019 ம் தேதி இரவு 8.00 மணிக்கு எங்கள் ஊர் மந்தையில் நடைபெற்ற கூட்டத்திற்கு நானும், என் அம்மா காந்திமதி, என் அப்பா தங்கராஜ் ஆகியோர் சென்றிருந்தோம். அப்போது எதிரி ராசு என்பவர் என் அம்மாவைப் பார்த்து நோத்தா, நொம்மா, தேவிடியா என்று அசிங்கமாக பேசி சின்னழகன் என்பவரின் வீட்டில் எங்களுக்கு உரிமை இல்லை என்று எல்லார் முன்னிலையிலும் திட்டினார். அதனால் என் அம்மா வழக்கு போட்டு பார்த்துக் கொள்வோம் என்று சொல்லி எங்களுடன் வீட்டிற்கு வந்துவிட்டார். அதன்பிறகு மறுநாள் 10.09.2019 ம் தேதி

இரவு 10.00 மணியளவில் நானும், எனது தங்கை தனலெட்சுமி, மற்றும் தங்கையின் கைகுழந்தையுடன் எங்கள் வீட்டில் இருந்தபோது, ராசு மற்றும் நல்லியப்பன் ஆகியோர் கம்பை எடுத்துக் கொண்டு எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அடித்தார்கள். அவர்களுடன் சுப்பிரமணி, அழகர்சாமி, ராமசாமி, பூஞ்சோலை மற்றும் செல்லத்துரை என்பவர்களும் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கையால் எங்களை அடித்தார்கள். ராசு என்பவர் கம்பை வைத்து எனது வலது கை மற்றும் முதுகு ஆகிய இடங்களில் அடித்து சிராய்ப்பு காயங்களை ஏற்படுத்தினார். விலக்க வந்த என் தங்கையை ராசு என்பவரும், அவரது அப்பா நல்லியப்பன் என்பவரும் சேர்ந்து அடித்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்தார்கள். அதில் அவருக்கு ஊமைக் காயம் ஏற்பட்டது. அதனால் அவரது வலது தொடையில் பலத்த வீக்க காயம் ஏற்பட்டது. வலி தாங்காமல் நாங்கள் கத்திய சத்தம் கேட்டு அருகில் இருந்த பழனிச்சாமியின் குடும்பத்தினர் வந்து சத்தம் போட்டு விலக்கிவிட்டபோது, எதிரிகள் என்னைப் பார்த்து உன் சாவு என் கையில்தான் என்றும், உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்றும் ராசு என்பவர் மிரட்டிவிட்டு சென்றார். பின்னர் நான் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதிக் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனுவில் என் அம்மா காந்திமதியும், என் சித்தப்பா ராஜா என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொண்ட பின்னர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். வலி அதிகமாக இருந்ததால் மறுநாள் மீண்டும் மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்ந்து 2 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து என்னையும், மற்ற சாட்சிகளையும் விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.11 15:03:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : **ராஜா (பார்வை மகஜர் சாட்சி)** |
| Father's/Husband's Name | : **சின்னு** |
| Village | : **துவராபதி** |
| Taluk | : **நத்தம்** |
| District | : **திண்டுக்கல்** |
| Age | : 46/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2025

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

**1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் என் வீட்டின் முன்பாக அதிகாலை நேரத்தில் சார்பு ஆய்வாளர் வந்து நானும், பழனிச்சாமி என்பவரும் பேசிக் கொண்டிருந்தபோது எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். பின்னர் சம்பவ இடத்தை படம் வரைந்து எழுதி கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், பழனிச்சாமி என்பவரும் கையொப்பம் செய்தோம். (பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.11 15:03:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 5 PW- 3

| | |
|---|---|
| Name | : காந்திமதி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : தங்கராஜ் |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 47/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2025

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மகன். 1 முதல் 7 வரையிலான எதிரிகளை தெரியும். கடந்த 09.09.2019 ம் தேதி இரவு 8.00 மணியளவில் எங்கள் ஊர் மந்தையில் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தபோது, ராசும், நல்லியப்பன் என்பவரும் என் மாமனார் சின்னழகன் என்பவர் பெயரில் பட்டா உள்ள வீட்டை நீங்கள் காலி செய்து விடுங்கள் என்று கூறினார். அதற்கு நாங்கள் காலி செய்ய முடியாது என்று சொன்னோம். தேவிடியா, அவுசாரி என்று அசிங்கமான வார்த்தைகளால் மேலும் மோசமான வார்த்தைகளாலும் பேசியதால் அதை தாங்க முடியாமல் அழுது கொண்டே காவல் நிலையம் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு

வந்துவிட்டோம். மறுநாள் 10.09.2019 ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த ஒரு நபர் பேச்சுவார்த்தை நடத்தலாம் வாருங்கள் என்று கூறினார். அதற்கு நாங்கள் வரமுடியாது போலீஸ் ஸ்டேஷன் போகிறோம் என்று சொல்லிவிட்டேன். பின்னர் அன்று இரவு 10.00 மணியளவில் என் மகன் அ.சா.1 மற்றும் என் மகள் தனலெட்சுமியும், அவரது கைக்குழந்தையுடன் எங்கள் வீட்டில் இருந்தபோது, ராசு, நல்லியப்பன், சுப்பிரமணி, பூஞ்சோலை, ராமசாமி, அழகர்சாமி, செல்லத்துரை ஆகியோர் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் மகன் அ.சா.1 ஐ பார்த்து தேவடியா மகனே என அசிங்கமாக பேசி போலீஸ்டேசன் போறவனா நீ என்று கேட்டு ராசு கையில் வைத்திருந்த கம்பால் எனது மகனை வலது கை மற்றும் முதுகில் சரமாரியாக அடித்து காயப்படுத்தினார். அதைப் பார்த்து என் மகள் தனலெட்சுமி விலக்கிவிட வந்தபோது ராசு மற்றும் நல்லியப்பன் இருவரும் சேர்ந்து அவரது நைட்டியை பிடித்து இழுத்து வலது தொடையில் கம்பால் அடித்து காயப்படுத்தினார்கள். மற்ற எதிரிகள் அனைவரும் கையால் அடித்தார்கள். நானும், அவர்களிடம் கை எடுத்து கும்பிட்டும் அவர்கள் விடவில்லை. எங்கள் அலறல் சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் வந்ததும் எதிரிகள் அனைவரும் ஓடிவிட்டார்கள். ராசு என்பவர் என் மகனை பார்த்து என்றைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றுவிட்டார். பின்னர் நாங்கள் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அந்த புகார் மனுவில் நான் சாட்சிக் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். அதன் பின்னர் நத்தம் அரசு மருத்துவமனையில் என் பிள்ளைகள் இருவரும் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். என் மகள் கைகுழந்தையுடன் இருந்ததால் இருவரும் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். மறுநாள் வலி அதிகமாக இருந்ததால் மீண்டும் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சுமார் 2 நாட்கள் என் மகளும், மகனும் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.11 15:03:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்